# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 20/2018 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | லட்சுமணன் | நாள் | 18.04.2024 |
| தகப்பனார் பெயர் | தானப்பன் | | |

**5 முதல் 9 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

35) மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ள மே.மு.வ.எண்.2/2023 ல் உள்ள தரப்பினர்கள் அனைவரும் தற்போது இவ்வழக்கில் தரப்பினர்களாக உள்ளனரா என்றால், இல்லை. மேற்படி மேல் முறையீட்டு வழக்கு ராமசாமி கவுண்டரின் வாரிசுகளுக்கிடையே நடைபெற்று வருகிறது என்றால், சரிதான். தற்போது இந்த வழக்கிலுள்ள சொத்து மேற்படி ராமசாமி கவுண்டரின் பூர்வீக சொத்தா என்றால், இல்லை. அவர் கிரயம் பெற்ற சொத்து. மேற்படி சொத்தை ராமசாமி கவுண்டர் யாரிடமிருந்து கிரயம் பெற்றார் என்றால், கூழையக்கவுண்டர் மற்றும் பெரமாத்தாள் ஆகியோரிடமிருந்து கிரயம் பெற்றார். எந்த தேதியில் கிரயம் பெற்றார் என்றால், தேதி, மாதம் தெரியவில்லை. ஆனால் 1938 ம் வருடத்தில் கிரயம் பெற்றார்.

36) எவ்வளவு தொகைக்கு மேற்படி சொத்தை ராமசாமி கவுண்டர் கிரயம் பெற்றார் என்றால், ரூ.100/–க்கு கிரயம் பெற்றார். மேற்படி சொத்திற்கு 1938 ம் வருடத்தில் என்ன சர்வே எண் என தெரியுமா என்றால், ச.எண்.293/3 ஆகும். மேற்படி கிரயப்பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால், பார்த்துள்ளேன். அதில் சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், 2.30 ஏக்கர் என விஸ்தீரணம் குறிப்பிடப்பட்டிருந்தது. மேற்படி ராமசாமி கவுண்டர் ச.எண்.293/3 ல் 2.30 ஏக்கர் நிலத்தை 1938 ம் வருடத்தில் ரூ.100/–க்கு கூழையக்கவுண்டர் மற்றும் பெரமாத்தாள் ஆகியோரிடமிருந்து கிரயம் பெற்றுள்ளார் என நான் தற்போது சொல்லும் சங்கதியை என் வழக்குரையிலோ, முதல் விசாரணை சாட்சியத்திலோ சொல்லவில்லை என்றால், சரிதான்.

37) என் வழக்குரையில் மேற்படி ராமசாமி கவுண்டருக்கு தாவா சொத்து கிரயப்படி பாத்தியப்பட்டதா அல்லது பூர்வீக படி பாத்தியப்பட்டதா என்பதை நான் குறிப்பாக சொல்லவில்லை என்றால், சரிதான். மேற்படி ராமசாமி கவுண்டரின் பெயரிலுள்ள கிரயப்பத்திரத்தை என் வழக்குரையுடனோ அல்லது என் முதல் விசாரணை பிரமாண பத்திரத்துடனோ நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். வழக்கு நிலுவையிலிருக்கும் போதுதான் அதன் பதிவு நகல் பெற்றேன். எப்போது மேற்படி நகலை பெற்றேன் என்றால், குறிப்பாக என்னால் சொல்ல இயலவில்லை. ஆனால் கடந்த இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன்னால் பெற்றிருப்பேன்.

38) மேற்படி ராமசாமி கவுண்டரின் பெயரிலுள்ள அவரது தனிப்பட்ட கிரய சொத்தை பொறுத்து அவர் தன் விருப்பம்போல் ஏற்பாடுகள் செய்ய உரிமையுடையவர் என்றால், சரியல்ல. வாரிசுகள் உள்ள நிலையில், அவர் அவ்வாறு செய்ய இயலாது. நான் சொல்வது தவறானது என்றாலும், சட்டப்படி ராமசாமி கவுண்டருக்கு தன் சுயார்ஜித சொத்துக்களை பொறுத்து ஏற்பாடுகள் செய்ய உரிமையுள்ளது என்றால், சரியல்ல. நான் சொல்வதுபோல் கடந்த 1938 ம் வருடத்தில் ராமசாமி கவுண்டர் தாவா சொத்தை கிரயம் பெற்றதாக நான் சொல்வது தவறானது என்றாலும், என் வழக்குரைக்கு முரணானது என்றாலும் சரியல்ல.

39) நான் சொல்லும் 1938 ம் வருட கிரய ஆவணத்தில் செக்குபந்தி விவரங்கள் கண்டு எழுதப்பட்டுள்ளதா என்றால், செக்குபந்தி விவரங்கள் உள்ளது. அதில் என்ன செக்குபந்தி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், செக்குபந்தி விவரத்தை நான் குறிப்பாக பரிசீலிக்காததால், அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. இவ்வழக்கில் நான் செக்குபந்தி விவரங்களை சொல்லியுள்ளேனா என்றால், சொல்லியுள்ளேன். நான் சொல்வது தவறானது என்றாலும், என் வழக்குரை சொத்து விவரத்தில் நான் எவ்வித செக்குபந்தி விவரத்தையும் சொல்லவில்லை என்றாலும், சரியல்ல.

40) என் தந்தை கடந்த 1996 ம் வருடத்தில் அ.வ.எண்.589/1996 என்ற வழக்கை தாக்கல் செய்து, அதில் ராமசாமி கவுண்டரின் சொத்துக்கள் குறித்து குறிப்பிட்டு, அதில் தனக்கு பாக உரிமையுள்ளதாக கோரிதான் வழக்கு தாக்கல் செய்தார் என்றால், சரிதான். மேற்படி வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பிற்கு எதிராகதான் நான் சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தேன் என்றால், சரிதான். மேற்படி பாகபிரிவினை வழக்கில் என் தந்தை தானப்பன் அவரது சகோதரர் காளியப்பனின் மகன் லிங்கேஷ்வரன் பெயரில் மேற்படி ராமசாமி கவுண்டர் உயில் ஆவணம் எழுதி வைத்தது செல்லாது என பரிகாரம் கேட்டு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளாரா என்றால், இல்லை. என் தந்தைக்கு மேற்படி உயில் குறித்தே அப்போது அவருக்கு தெரியாது. நான் சொல்வதுபோல் என் தந்தைக்கு மேற்படி உயில் குறித்து தெரியுமா தெரியாதா என்பது குறித்து நான் கூற இயலாது என்றால், சரியல்ல.

41) மேற்படி உயில் ஆவணம் பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணம் என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால், தெரியும். கிராம நிர்வாக அலுவலர் சொல்லிதான் எனக்கு தெரியும். எப்போது மேற்படி உயில் குறித்து எனக்கு தெரியவந்தது என்றால், வருடம் சரியாக நினைவில்லை. ஆனால், அவர் சொல்லியதிலிருந்து ஒரு வாரத்திற்குள் இவ்வழக்கை நான் தாக்கல் செய்துவிட்டேன்.

42) தற்போது நான் என் பாட்டனார் ராமசாமி கவுண்டர் அவ்வாறு ஒரு உயிலை எழுதி வைக்கவில்லை என் கூறுகிறேனா? அல்லது அதிலுள்ள கையெழுத்து அவருடையது அல்ல என கூறுகிறேனா? என்றால், அவ்வாறு என் பாட்டனார் எந்த உயிலையும் எழுதி வைக்கவில்லை என்பது தான் என் வாதம். மேற்படி உயில் பதிவு செய்யப்பட்ட உயில் என்பதால், அதில் கண்டுள்ள என் பாட்டனாரது கையெழுத்து அல்லது கைரேகையை அதற்குரிய நிபுணரிடம் அனுப்பி கருத்துரை பெற நான் நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால், என் பாட்டனாரது வேறு கைரேகையோ, கையெழுத்தோ அடங்கிய ஆவணங்கள் எதுவும் என் வசம் இல்லாததால், அவ்வாறு கருத்துரை பெற இயலவில்லை.

43) என் பாட்டனாரது வேறு கைரேகையோ, கையெழுத்தோ அடங்கிய ஆவணங்கள் எதுவும் இல்லாததால்தான் நான் மேற்படி ஆவணங்களை நிபுணருக்கு அனுப்பி கருத்துரை பெற முடியாமல் போய்விட்டது என என் வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால், இல்லை. அவ்வாறு மேற்படி உயில் ஆவணம் குறித்து நான் சந்தேகம் எழுப்பும் நிலையில், மேற்படி உயில் ஆவணத்தை பதிவு செய்த அதிகாரியை அழைத்து, அது குறித்து நீதிமன்றத்திற்கு தெளிவுபடுத்த ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால், தற்போது வரை இல்லை.

44) என் வழக்குரையில் மேற்படி லிங்கேஷ்வரன் தன் அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி ராமசாமி கவுண்டரை அழைத்து சென்று, மோசடியாக கையெழுத்து பெற்று தாவா சொத்தை பொறுத்து ஆவணங்களை ஏற்படுத்தி கொண்டதாக நான் சொல்லியுள்ளேனா என்றால், நான் அவ்வாறு சொல்லவில்லை மேற்படி லிங்கேஷ்வரன் தன் செல்வாக்கை பயன்படுத்தி மோசடியாக ஆவணங்களை ஏற்படுத்தி கொண்டதாக சொல்லியுள்ளேன். மேற்படி என் பாட்டனாரால் ஏற்படுத்தப்பட்ட உயில் ஆவணம் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்பதாலும், மேற்படி உயில் ஆவணத்தில் செல்லுதன்மை குறித்து பாகபிரிவினை வழக்கில் என் தகப்பனாரே ஆட்சேபிக்காத நிலையிலும், தற்போது இவ்வழக்கில் மேற்படி உயில் குறித்து நான் ஆட்சேபிக்க இயலாது என்றால், சரியல்ல.

45) மேற்படி ராமசாமி கவுண்டருக்கு எத்தனை வாரிசுகள் என்றால், நான்கு ஆண் வாரிசுகளும், இரண்டு பெண் வாரிசுகளும் உள்ளனர். மேற்படி ராமசாமி கவுண்டரின் மகன்களும், மகள்களும் மேற்படி உயில் குறித்து எதுவும் ஆட்சேபிக்கவில்லை என்றால், உயில் எழுதப்பட்ட சமயத்தில் அவர்கள் யாரும் உயிருடன் இல்லை. எந்த வருடத்தில் மேற்படி உயில் ஆவணம் எழுதப்பட்டது என்றால், வருடம் எனக்கு சரியாக நினைவில்லை. பிரதிவாதிகள் தங்களது பதிலுரையில் மேற்படி உயில் 27.06.1979ம் வருடத்தில் எழுதப்பட்டதாக சொல்லியுள்ளனர் என்றால், அது சரியானது தான்.

46) அவ்வாறெனில் 1979ம் வருடத்திற்கு பின்புதான் என் பாட்டனார் ராமசாமி கவுண்டர் இறந்துள்ளார் என்றால், சரிதான். என் பாட்டனார் இறந்ததற்கு பின்னிட்டுதான் அவருடைய வாரிசுகள் அனைவரும் இறந்துள்ளனர் என்றால், சரிதான். ராமசாமி கவுண்டர் 1982ம் வருடத்தில் இறந்தார் என நான் என் வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். அவ்வாறுள்ள நிலையில், மேற்படி ராமசாமி கவுண்டரின் வாரிசுகள் உயில் எழுதப்பட்ட சமயத்தில் உயிருடன் இல்லை என் நான் சொல்வது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல. மேற்படி உயில் எழுதப்பட்ட விவரம் அவர்களுக்கு தெரியாது. நான் சொல்வது தவறானது என்றாலும், மற்ற நபர்களுக்கு மேற்படி உயில் ஆவணம் குறித்து தெரியுமா? தெரியாதா? என்பது குறித்து சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு உரிமையில்லை என்றால், சரியல்ல.

47) என்னை தவிர மேற்படி ராமசாமி கவுண்டரின் மகன்கள் மற்றும் மகள்கள் வழி வாரிசுகள் யாரும் மேற்படி உயில் ஆவணம் குறித்து எவ்வித ஆட்சேபனையும் செய்யவில்லை என்றால், சரிதான். குறிப்பாக என்னுடன் பிறந்தவர்கள் கூட மேற்படி உயிலை ஆட்சேபித்து வழக்கு எதுவும் போடவில்லை என்றால், சரிதான். அவ்வாறுள்ள நிலையில், மேற்படி ராமசாமி கவுண்டரின் வாரிசுகளை இவ்வழக்கில் பிரதிவாதிகளாக சேர்த்து மேற்படி உயில் ஆவணம் குறித்து, பரிகாரம் கோரியுள்ளேனா என்றால், இல்லை. இவ்வழக்கில் உரிய பரிகாரம் கோராததாலும், உரிய தரப்பினர்களை சேர்க்காததாலும், என் வழக்கு எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்ய அருகதை உடையது என்றால், சரியல்ல.

48) என் தந்தை தாக்கல் செய்த பாகபிரிவினை வழக்கையும், அதன் தீர்ப்பிற்கு எதிராக நான் தாக்கல் செய்த மேல் முறையீட்டு வழக்கையும் 1ம் பிரதிவாதியும், அவரது குடும்பத்தினரும் தான் எதிர்த்து நடத்தி வருகிறார்கள் என்றால், சரியல்ல. மேற்படி வழக்குகளில் 1ம் பிரதிவாதி எதிர்த்து வழக்காடி வருவதால், 1ம் பிரதிவாதிக்கு உயில் வழியில் பாத்தியப்பட்ட சொத்துக்களுக்கு இடையூறு கொடுப்பதற்காகதான்

இவ்வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

49) உயில் ஆவணம் பதிவு செய்யப்பட்ட பத்திரம் என்பதால், காலவரம்பிலிருந்து தப்பித்து கொள்ளத்தான் மேற்படி பத்திரம் குறித்து முன்பு தெரியவில்லை எனவும், தற்போது தான் தெரியவந்தது எனவும், வழக்கிற்காக பொய்யுரைக்கிறேன் என்றால், சரியல்ல.

50) நான் சொல்வதுபோல் என் பாட்டனார் ராமசாமி கவுண்டர் தன் இறுதிகாலம் வரை என்னுடன் தான் இருந்தார் என்பதற்கு எவ்வித ஆதாரங்களும் இல்லை என்றாலும், மேற்படி ராமசாமி கவுண்டரை 1ம் பிரதிவாதிதான் அவரது இறுதிகாலம் வரை பராமரித்து, அவரது இறப்பிற்கு பின்பு, அவரை நல்லடக்கம் செய்தார் என்றாலும், சரியல்ல.

(5 முதல் 9 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/—திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.